## பெண்ணின் கண்ணியமும் மரியாதையும்

இஸ்லாம் பெண்களின்பால் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளது, அவளுடைய அந்தஸ்தையும் உயர்வையும் மேம்படுத்தியுள்ளது. ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் கூறுகிறார்கள், அல்லாஹ்வின்மீது சத்தியமாக, நாங்கள் அறியாமை காலத்தில் பெண்களுக்கு எவ்வித முக்கியத்தவமும் அளித்ததே இல்லை. இந்த நிலை, பெண்களைப்பற்றி திருக்ஃகுர்ஆனில் மிகவும் விரிவான முறையில் முக்கியத்துவமளித்துப் பல விஷயங்கள் அறிவுறுத்தப்பட்ட வரையிலும் தொடர்ந்தது.

### இஸ்லாத்தில் பெண்களுக்கு முக்கியமத்துவமளிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள்

1 இஸ்லாம் அரேபியர்களிடையே காணப்பட்ட அனைத்து விதமான திருமணச் சடங்குகளின் முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவந்த தோடு, முஸ்லிம்களால் இன்றுவரை கடைபிடிக்கப்பட்டுவருகின்ற, அதற்கான, பொருத்தமான, சரியான முறையினை மட்டுமே நிலைத் திருக்கச் செய்துள்ளது. ஏனெனில், இதில்தான் ஒரு பெண்ணின் மரி யாதையும் கண்ணியமும் அடங்கியுள்ளது. அவள் ஆண்கள் அனை வருக்குமான ஒரு பொழுதுபோக்குச் சாதனமல்ல.

2 இஸ்லாம் பெண்களின் அந்தஸ்து மற்றும் கண்ணித்தைப் பாதுகாத்துள் ளது. அறியாமை காலத்தில் பெண்கள் ஒரு சொத்தாகக் கருதப்பட்டு வாரிசுதாரர்களுக்கு சொத்து பங்கீடு செய்யப்படுவதுபோன்றே பங்கீடு செய்யப்பட்டு வந்தனர். மூத்த மகன் தன்னுடைய தந்தையின் சொத்துக் களுக்கு வாரிசாக இருப்பதுபோன்றே அவனுடைய தந்தையின் மனை வியர்களுக்கும் வாரிசாகக் கருதப்பட்டான். இஸ்லாம் தோன்றியபின் இந்த வழக்கத்தை ஹராமானதாகப் பிரகடனம் செய்தது.

3 அரேபிய மக்களிடையே பெண்கள் சொத்துக்களுக்கு வாரிசாகும் உரிமை அளிக்கப்படவில்லை. ஒரு மகள் தன்னுடைய தந்தையின் சொத்துக்கு வாரிசாக முடியாது, ஒரு மனைவி தன்னுடைய கணவனு டைய சொத்திற்கான வாரசாக முடியாது, ஒரு தாயும் தன்னுடைய மகனுடைய சொத்திற்கு வாரிசாக முடியாது. ஆனால், அல்லாஹ் தஆலா திருக்ஃகுர்ஆன் மூலமாக பெண்களுக்கு வாரிசுகள் என்ற முறையில் அவர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட பங்கினை அளித்துள் ளான், அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

لِّلرِّجَالِ نَصِيبٌ مِّمَّا تَرَكَ ٱلْوَٰلِدَانِ وَٱلْأَقْرَبُونَ وَلِلنِّسَآءِ نَصِيبٌ مِّمَّا تَرَكَ ٱلْوَٰلِدَانِ وَٱلْأَقْرَبُونَ مِمَّا

قَلَّ مِنْهُ أَوْ كَثُرَ ۚ نَصِيبًا مَّفْرُوضًا ﴿٧﴾ النساء 7 )

www.uzairfalahi.com

*பொருள்: (மரணமடைந்த) தாய் தந்தையரும் நெருங்கிய உறவினரும் விட்டுச்சென்ற சொத்தில் ஆண்களுக்குப் பங்குண்டு, (அதுபோல) தாய் தந்தையரும் நெருங்கிய உறவினரும் விட்டுச்சென்ற சொத்தில் பெண்களுக்கும் பங்குண்டு, அச்சொத்து குறைவாகவோ அதிகமாகவோ இருந்தாலும் சரியே. இந்தப் பங்கு அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்டதாகும் (அந் நிசா:7)*

*4* இஸ்லாம் ஏழ்மையின் அச்சத்தாலும் வெட்கக்கேடு என்று கருதியும் அரேபியர்கள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்து வந்த வழக்கத்தினையும் தடுத்து நிறுத்தியுள்ளது.

*5* இஸ்லாம் பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமையினை வழங்கியது. இறைத்தூதர் ﷺ அவர்களுடைய காலத்தில் பெண்கள் அவர்களிடம் வந்து மார்க்க விஷயங்களைப்பற்றிய கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். அவர்கள் ﷺ அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிப்பார்கள். இதேபோன்று, பெண்கள் உம்மஹாதுல் முஃமினீன்களான இறைத்தூதர் ﷺ அவர்களுடைய மனைவயிரிடமும் சென்று கேட்டறிந்துகொண்டனர்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் பெருநாட்களில் ஆண்களுக்கிடையே க்ஹுத்பா பிரசங்கம் செய்து முடித்தபின் அவர்கள் பெண்களிடையே சென்று அவர்களுக்கும் அறிவுரை நிகழ்த்துவார்கள். அவர்கள் ﷺ கல்வி கற்பது முஸ்லிம்களான ஆண் பெண் அனைவர் மீதும் கடமையாக்கியுள்ளார்கள். அவர்கள் ﷺ கூறுகிறார்கள்:

**طَلَبُ الْعِلْمِ فَرِيضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ**

*பொருள்: கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் (இப்னு மாஜா).*

*6* கணவன் இறந்துவிட்டாலோ அல்லது நோய்வாய்பட்டுவிட்டாலோ, குடும்பப் பொறுப்பினை ஏற்கும் எவரும் இல்லாத நிலையில் பெண்கள் தம்மையும் தன் குழந்தைகளையும் பராமரிப்பதற்காக இஸ்லாம் வேலை செய்து சம்பாதிக்கும் உரிமையும் அனுமதியும் அளித்துள்ளது. ஒரு பெண் வெளியில் சென்று சம்பாதிக்கும் நிலையில் இல்லாதிருந்தால், அவளையும் அவளுடைய குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்குரியதாகும். இதேபோன்று, இஸ்லாமியச் சமுதாயத்திற்கு ஒரு குறிப்பிட்ட பெண்ணின் அனுபவம் மற்றும் ஆற்

www.uzairfalahi.com

றல் தேவைப்படும் நிலையில், அவள் அப்பணியினை மேற்கொள்ளும் நிலையில் இருந்தால், அவள் அப்பணியினை ஏற்றுக்கொண்டு அதனைச் செய்யவேண்டும், அவ்வாறு செய்யாது பின்வாங்கினால் அது சரியானதாக ஆகாது.

7 திருமணம் முறையானதாக நிறைவேற்றப்படுவதற்குப் பெண் ஒப்புதல் அளிப்பதை இஸ்லாம் ஒரு நிபந்தனையாக ஆக்கியுள்ளது. எந்த ஒருவரும் ஒரு பெண்ணையும், அவள் விரும்பாத நிலையில் தன்னோடு திருமணம் செய்துகொள்ளும்படி யாரும் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ تُنْكَحُ الأَيِّمُ حَتَّى تُسْتَأْمَرَ، وَلاَ تُنْكَحُ البِكْرُ حَتَّى تُسْتَأْذَنَ» قَالُوا: يَا رَسُولَ اللَّهِ، وَكَيْفَ إِذْنُهَا؟ قَالَ: أَنْ تَسْكُتَ

*பொருள்: திருமணமான பெண்ணை அவள் தாமாகவே கேட்டுக்கொள்ளாதவரை திருமணம் செய்துகொடுக்கக்கூடாது, திருமணமாகாத கன்னிப்பெண்ணிடமிருந்து ஒப்புதல் பெறாமல் அவளைத் திருமணம் செய்துகொடுக்கக்கூடாது. நபித்தோழர்கள் கேட்டார்கள், கன்னிப்பெண்ணிடம் எவ்வாறு அனுமதி கேட்பது, அவர்கள் ﷺ கூறினார்கள், அவள் அமைதியாய் இருப்பதே அவளுடைய அனுமதியாகும். (புக்ஹாரி).*

8 இஸ்லாம் பாலினத்தின் அடிப்படையில் ஆண் பெண் இருபாலாரிடையே எந்த வேறுபாடும் செய்வதில்லை, மாறாக, அவர்களிடைய மேன்மையும் முன்னுரிமையும் அல்லாஹ்வின் அருள் அவர்களுக்கிடையே வேறுபடுவதன் அடிப்படையிலேயே அமைகிறது. இதனைத் தவிர, அவர்களிடையே வேறு எந்த வித்தியாசமும் கிடையாது, அனைவரும் சமமானவர்கள். இவர்களிடையே இறையச்சம் மற்றும் நற்காரியங்களின் அடிப்படையிலேயே மேன்மையும் முன்னுரிமையும் காணப்படுகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

مَنْ عَمِلَ صَٰلِحًا مِّن ذَكَرٍ أَوْ أُنثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُۥ حَيَوٰةً طَيِّبَةً ۖ وَلَنَجْزِيَنَّهُمْ
أَجْرَهُم بِأَحْسَنِ مَا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿٩٧﴾ ( النحل 7)

*பொருள்: ஆணாயினும் பெண்ணாயினும் எவர் ஒருவர் இறை நம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல்களைப் புரிகின்*

www.uzarfalahi.com

*றாரோ அவரை இவ்வுலகில் தூய வாழ்வு வாழச்செய்வோம். (மறு மையிலும்) அத்தகையோர்க்கு அவர்களின் உன்னதமான செயல்க ளுக்கு ஏற்ப நாம் கூலி வழங்குவோம் ( அந்நஹ்ல்:97)*

**மற்ற கலாச்சாரங்களில் பெண்களுடைய அந்தஸ்து**

இப்போது நாம் மற்ற சமுதாயங்களில் பெண்களுக்கு அளிக்கப்படுகின்ற அந்தஸ்தினைப்பற்றி ஒரு பார்வை செலுத்துவோம். இதன் மூலம், இஸ் லாத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்து மற்றும் கண்ணியத் தைப்பற்றி நாம் அறிந்துகொள்ள முடியும்.

பண்டைக் காலத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகளைப் பற்றி பார்க்கும்போது எகிப்து நாட்டில் மட்டுமே பெண்களுக்கு சில உரிமைகள் அளிக்கப்பட்டிருந்தன என்பது தெளிவாகின்றது. பெண்களுக்கு வாரிசு என்ற முறையில் சொத்துக்கள் அளிக்கப்பட்டன, கணவன் இல்லாத போது மனைவி குடும்ப விஷயங்களைக் கவனித்து வந்தாள். இருப்பி னும், ஒரு மனைவி கணவனுடைய சொத்தாகவே கருதப்பட்டுவந்தாள். ஒரு பெண் உடலுறவின் மூலம் இச்சைகளை நிறைவேற்றிக்கொள்வதற் கான ஒரு வழிகயாகக் கருதப்பட்டாள்.

சீனா நாட்டுக் கலாச்சாரத்தில் பெண்களுக்கு எந்த அந்தஸ்தும் கொடுக்கப் படவில்லை, அவளை கசப்பான அசுத்தமான தண்ணீராகக் கருதிவந்தனர். கணவனுடைய வீட்டில் அவள் அசுத்தமானவளாகக் கருதப்பட்டாள், கண வன் விரும்பும்போதெல்லாம் அவளை வீட்டுக்கு வெளியே விரட்டிவிடு வான். கணவன் மரணமடைந்துவிட்டால், அவளை வீட்டில் கால்நடை களைப்போன்று கட்டிப்போட்டு அனைத்துவித வேலைகளையும் செய்ய வைத்தனர்.

கிரேக்கக் கலராச்சாரத்திலும் பெண்ணுக்கு எந்த ஒரு மதிப்பும் இருக்க வில்லை. ஆகவே, பெண்களை கணவர்களுடைய வீடுகளில் வேலைக்கார அடிமைப்பெண்களைப்போன்று கட்டிப்போட்டு வைப்பார்கள், அவள் எந்த ஒரு உரிமையையும் பெற்றிருக்கவில்லை. கிரேக்கர்கள் பெண்களை ஷைத்தான்களின் (பிசாசுகள்) அசுத்தச் செயல்கள் என்று கருதிவந்தனர். அவர்களுக்கு பேரிடர் ஏதும் ஏற்பட்டுவிட்டால் அவர்களுடைய பொய் யான கடவுகள்களுக்கு இந்தப் பெண்களை பலியிட்டு சமர்ப்பிப்பார்கள்.

பண்டைய இந்தியக் கலாச்சாரத்தில் பெண்ணை அசுத்தமான ஒன்றாகக் கருதினர், கணவன் இறந்துவிட்டால், மனைவியையும் உடன்கட்டை ஏற்றி கணவனுடைய சடலத்துடன் தகனம் செய்துவிடுவார்கள். சில சமயங்களில்,

www.uzairfalahi.com

அவளை உயிருடனும் புதைத்துவிடுவார்கள். கணவர்களுக்கு மனைவியை அடித்துத் துன்புறுத்துவது, கொடுமைகளையிழைப்பது மற்றும் ஏசிப் பழித்து இழிவுபடுத்துவதற்கான பூரண அதிகாரம் இருந்தது.

ரோமானியர்களிடத்திலும் கிரேக்கர்களைபோன்றே பெண்கள் இழிவுக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர், சொல்லப்போனால், நிலைமை அவர்களை விட மோசமானதாகவே இருந்தது. பெண்கள் இன்பக் களியாட்டங்களுக்கான சாதனங்களாகவே இருந்தனர், கடைத்தெருக்களில் அவள் விலைகொடுத்து வாங்கவும் விற்கவும் பட்டாள். பெண் கணவனுடைய பரிபூரண சொத் தாகக் கருதப்பட்டாள். ஒரு கணவன் எண்ணற்ற பெண்களுடன் விவாகம் செய்துகொள்வான், பெண்கள் மிகக் கடுமையான முறையில் துன்புறுத்தப் பட்டனர். அவர்களுடைய சக்திக்கு அதிகமான பணிகளைச் செய்யும்படி அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

பாரசீகத்தில் மக்கள் பெண்களை இழிவுபடுத்தினர் மற்றும் அவள் குழப் பங்கள் பரவுவதற்குக் காரணமானவள் எனக்கருதினர். இதனால்தான், பெண்கள்மீது எல்லையற்றக் கொடுமைகளை இழைத்து வந்தனர், பெண் கள்கணவர்களின் முழு கட்டுப்பாடு மற்றும் கட்டளைக்குட்பட்டவர்களாக இருந்தனர். கணவன் அவளைக் கொல்லும் உரிமையும் பெற்றிருந்தான். மேலும், எவ்விதக் கட்டுப்பாடுமின்றி எண்ணற்ற பெண்களைத் திருமணம் செய்துகொள்ளவும் உரிமை பெற்றிருந்தான்.

யூதர்கள் பெண்களை ஆதம் (அ) அவர்களை மயக்கி அவர்களைச் சுவர்க்கத் திலிருந்து வெளியேற்றும் குற்றத்தைப் புரிந்தவள் என்று கருதினர். மாத விடாயக் காலங்களில் பெண்கள் அசுத்தமானவர்கள் என்றும் அவள் தொடும் எந்தப் பொருளும் அசுத்தமானதாகிவிடும் என்றும் கருதினர். கணவர்கள் பெண்களை விற்கும் உரிமையும் அவர்களுக்கு வாரிசு சொத் துக்களை மறுக்கும் உரிமையும் பெற்றிருந்தனர்.

கிறித்தவர்கள் பெண்களை ஷைத்தானின் சாதனங்களாகவும் அவர்கள் பகுத் தறிவற்றவர்கள் என்றும் கருதினர். ரோம தேவாலயங்கள் பெண்களுக்குள் ஆன்மா இருப்பதில்லை என்று கருதிவந்தனர் மற்றும் அவர்களிடத்தில் பெண்கள் அசுத்தமானவர்கள் என்ற கருத்து நிலவிய காரணத்தினால், அவர் களுடன் திருமணம் செய்துகொள்ள முடியாது எனவும் கருதினர். இதன் காரணமாகவே, பெண்கள் கன்னியாஸ்திரிகளாக மாறிவிட்டனர். புரட்சி கரமான சிந்தனைகள் மற்றும் மாற்றங்கள் உண்டாகாதவரையில் இந்நிலை தொடர்ந்தது. இஸ்லாமிய மார்க்கம் தோன்றுவதற்கு முன்பாக அரேபியர் களிடையேயும் பெண்கள் ஆண்களுக்கான இன்பக் களியாட்டங்களுக்கான சாதனமாகவும் வாரிசு சொத்துக்களின் பங்காகவும் கையாளப்பட்டுள்ள

www.ijzafahl.com

*னர். மரணமடைந்தவருடைய சொத்துக்கள் அவருடைய வாரிசுதாரர்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கப்படுவதுபோன்றே பெண்களும் வாரிசுகளுக்கிடையே பங்கீடு செய்யப்பட்டு வந்தனர். மூத்த மகன் தன்னுடைய தந்தையின் மனைவியரை வாரிசு என்ற முறையில் பெற்று அனுபவித்து வந்தான். மாதவிடாய்க் காலங்களில் பெண்கள் அசுத்தமானவர்கள் என்று கருதி அவளை அப்புறப்படுத்தி வைத்தனர். கணவர் இறந்துவிட்டால் அவள் வீட்டின் ஒரு மூலையில் ஓராண்டு முழுவதுமாகக் கழிக்கவேண்டியிருக்கும், அவள் பழைய துணிகளை மட்டுமே உடுத்தவேண்டும். விபச்சாரம் மற்றும் முத்ஃஅஹ் எனும் குறுகிய காலத் திருமணம் பெண்களுக்கான கண்ணியமான தொழிலாகக் கருதப்பட்டது. அறியாமை காலத்தில் அரேபியர்களிடையே காணப்பட்ட மிகக் கொடூரமான வழக்கம் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்துவிடுவதாகும்..*

**ஆறாவது: மக்களிடையே சமத்துவம்**

*அரேபியர்கள் சமூக மற்றும் குலங்களின் அடிப்படையிலான அமைப்பினை கடைபிடித்தவர்கள், மற்றும் அவர்கள் மனிதர்களின் ஒருவரோடொருவரான உறவுகளைப்பற்றிய கருத்து, மனிதன் எஜமானனாகவோ அல்லது அடிமையாகவோ இருக்கவேண்டும் என்பதாகும். அந்தஸ்து மற்றும் மரபு முறை என்பது மக்களிடையே உயர்வின் படித்தரத்தை நிர்ணயிக்கக்கூடியதாக இருந்தது. இஸ்லாம் தோன்றிய பின்பு அவர்களுடைய இந்த பல்வேறு வர்க்கங்களையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. இறையச்சம் மற்றும் நற்காரியங்களைப் புரிவது ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே ஒருவருக்கு மற்றவர்மீது உயர்வும் முன்னுரிமையும் அளிக்கப்படும் என்பது ஒரு நிபந்தனையாகவே ஆக்கப்பட்டுவிட்டது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنَّا خَلَقْنَـٰكُم مِّن ذَكَرٍ وَأُنثَىٰ وَجَعَلْنَـٰكُمْ شُعُوبًا وَقَبَآئِلَ لِتَعَارَفُوٓا۟ ۚ إِنَّ أَكْرَمَكُمْ عِندَ ٱللَّهِ
أَتْقَىٰكُمْ ۚ إِنَّ ٱللَّهَ عَلِيمٌ خَبِيرٌ ﴿١٣﴾ الحجرات 3 )

*பொருள்: மனிதர்களே, நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு, நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும்பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம் (அல் ஹுஜ்ராத்:13)*

*இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:*



www.uzairfalahi.com

يَا أَيُّهَا النَّاسُ، أَلَا إِنَّ رَبَّكُمْ وَاحِدٌ، وَإِنَّ أَبَاكُمْ وَاحِدٌ، أَلَا لَا فَضْلَ لِعَرَبِيٍّ عَلَى عَجَمِيٍّ، وَلَا لِعَجَمِيٍّ عَلَى عَرَبِيٍّ، وَلَا أَحْمَرَ عَلَى أَسْوَدَ، وَلَا أَسْوَدَ عَلَى أَحْمَرَ، إِلَّا بِالتَّقْوَى

*பொருள்: மக்களே, நிச்சயமாக உங்களுடைய இரட்சகன் ஒருவனே, உங்களுடைய தந்தையும் ஒருவரே, எந்த ஒரு அரேபியருக்கும் அரேபியரல்லாத ஒருவர்மீது மேன்மையில்லை, எந்த அரேபியரல்லாத ஒருவருக்கும் அரேபியரான ஒருவர்மீதும் மேன்மையில்லை, அவ்வாறே எந்த ஒரு வெள்ளையருக்கும் கருப்பர் மீதும், எந்த ஒரு கருப்பருக்கும் வெள்ளையர் மீதும் மேன்மையில்லை, ஆனால், இறையச்சத்தின் அடிப்படையில் மட்டுமே (அஹ்மத்)*

**ஏழாவது: உலகளாவிய அணுகுமுறை**

அரேபியர்கள் அரேபிய தீபகற்பத்திலேயே வலுவற்றவர்களாகக் கருதப் பட்டனர். அவர்கள் பாரசீகம் மற்றும் ரோமப் பேரரசுகளைக்கண்டு அஞ்சிக் கொண்டிருந்தனர். வேறு வழியின்றி பாரசீக அல்லது ரோம அரசர்களுடைய ஆதிக்கத்தின்கீழ் வாழ்க்கையை கடைபிடித்துவந்தனர்.

ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ர) அவர்கள் இதனை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள், நிச்சமாக, பாரசீகர்களும் ரோமர்களும் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாகவே இருந்தனர்.

பாரசீக மற்றும் ரோம நாட்டவர்கள் அரேபியர்களை இழிவான கோணத்தில் பார்த்து வந்தனர். பாரசீக அரசர் ஒருவர் முஸ்லிம்களின் படைத்தலைவராக இருந்த முத்ஸன்னா பின் ஹாரித்ஸஹ்வுக்கு ஒரு கடிதத்தை எழுதினார், அதில் அவர் கூறியதாவது: நான் பாரசீக நாட்டுப் படை ஒன்றை உங்களுக்கு எதிராக அனுப்பியுள்ளேன், அவர்கள் அனைவருமே கோழிகள் மற்றும் பன்றிகளைப் பராமரிப்பவர்கள், என்னுடைய இந்தப் படையே உங்களோடு போரிடுவதற்குப் போதுமானதாகும். இக்கடிதத்திற்கு முத்ஸன்னா பின் ஹதாரித்ஸஹ் பதிலளித்துக் கூறினார்கள்: நீங்கள் இந்த இரண்டு வகையானவர்களில் ஒரு வகையானவராகவே இருக்க முடியும். நீங்கள் பகைமை உணர்வோடு ஆக்கிரமிப்பு செய்ய நாடினால் அதில் உங்களுக்குத் தீமையான பிரதிபலனே கிட்டும், அது எங்களுக்கச் சாதகமான ஒன்றாக அகிவிடும். ஆனால், நீங்கள் பொய் கூறுபவராக இருந்தால் அதற்கான தண்டனை அல்லாஹ்விடத்தில் தோல்வியும் இழிவுமேயாகும். எங்களுடைய கருத்தின்படி நீங்கள் போருக்கான நிர்ப்பந்தத்தில் உள்ளீர்கள். உங்களுடைய சூழ்ச்சி மற்றும் சதித்திட்டத்தை கோழிகள் மற்றும் பன்றிகளைப் பராமரிப்பவர்களிடமே ஒப்படைத்துவிட்ட அந்த அல்லாஹ்வுக்கே நன்றி

www.uzaifalahi.com

உரித்தாகட்டும். இந்தக் கடிதத்தைப் படித்த பாரசீக மன்னர் நிம்மதியற்று உளைச்சலுக்கு ஆளாகிவிட்டார்.

உண்மையில் உலகெங்கிலும் இஸ்லாமிய மார்க்கம் சென்றடைய வேண்டும் மற்றும் உலகளாவிய இஸ்லாமிய அட்சி நிலை நாட்டப்படவேண்டும் என்பதற்காகவே அரேபியர்களை இஸ்லாம் முஸ்லிம்களைக் கீழை மற்றும் மேலை நாடுகளையெல்லாம் வெற்றி கொள்பவர்களாக ஆக்கி விட்டுள்ளது.

* * *

www.uzairfalahi.com